பாரதிதாசனின் சமுதாயம்

## 2:0 பாட முன்னுரை

சமூகம் என்பது ஓர் அமைப்பு. அது யாராலும் உருவாக்கப்படாமல் தானே அமைவது. ஒரு சமூகம் உருவாக ஒத்த மனத்தினர் ஆக மனிதர் நெருங்கி வரவேண்டும். ஒரு பொதுமை கருதி ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். தத்தம் விருப்பு வெறுப்புகளை விட்டு ஒரு குறிக்கோளைக் கருதி ஒன்றிணைய வேண்டும். அதுவே சமூகம்; அதுவே சமுதாயம்.

விலங்குகளுக்குக் கூட்டமே உண்டு; சமூகம், சமுதாயம் என்ற அமைப்பு அவ்வுலகில் இல்லை. சமூகம் என்பதற்குத் திரண்டது என்பது பொருள். பாலில் வெண்ணெய் திரள்வது போல மாந்தரிடையே சமூகம் உருவாகும்.

சாதி சமய அடிப்படையிலான சமூகங்கள் உயர்ந்தன அல்ல; உயர்ந்த கருத்தின் அடிப்படையில் உருவாகும் சமூகங்கள் வையத்தை உய்விக்கும். இந்தியச் சமுதாயம் சிதறிக் கிடந்தது; மாநிலங்களாய்ப் பிரிந்து கிடந்தது; மதங்களால் போரிட்டுக் குலைந்தது. அடிமை இருளில் அறியாமைச் சேற்றில் புதைந்து கிடந்தது. அதனை ஒருமைப்படுத்த ‘விடுதலை’ என்னும் குறிக்கோள் தோன்றியது. இந்தியச் சமுதாயம் தோள்தட்டி ஆர்த்தது. விடுதலை பெற்றது. உரிமை வாழ்வு மலர்ந்தது.

உரிமை பெறு முன்பு இந்தச் சமூகம் எப்படி இருந்தது தெரியுமா? உப்புக் காய்ச்சுவதற்காகப் போராட ஓடுகிறது பாருங்கள் மக்கள் திரள்! உண்ணா நோன்பிருந்து நைகிறது பாருங்கள்! இப்படிப் போராடிக் கொண்டிருந்தது ஒரு சமூகம். அதன் மற்றொரு பகுதி எப்படி இருந்தது? இதோ பாரதியார் கூறுகிறார் கேளுங்கள்!

நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்
அஞ்சி அஞ்சிச் சாவார் - இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்கள் என்பார் - இந்த
மரத்தில் என்பார்; அந்தக் குளத்திலென்பார்
துஞ்சுது முகட்டி லென்பார் மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்

(பாரதியார் பாடல், பாரத ஜனங்களின் தற்கால நிலை: 1-8)

இப்படித்தான் மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்து கிடந்தது நாடு. இதனை அகற்றத் தோன்றியவரே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இது, ‘‘மடமைச் சேறு எழுந்திரு வெளியே வா ஒளியை நோக்கிய உன் பயணம் தொடங்கு,’’ என்று அறிவுறுத்திய பாவேந்தரல்லரோ அவர்?

## 2.1 பாரதிதாசனின் சமுதாயம் - ஒரு விளக்கம்

- **வறியவர் நலிவும் உடையவர் கொள்ளையும்**

வறுமைப் பிடியில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்தது தமிழ்ச் சமுதாயம். வறுமைக் கோட்டுக்குக் கீழே, மிகக் கீழே கோடிக்கணக்கான மக்கள் நைந்து நலிந்தனர். சிலர் மட்டும் செல்வராய், நில உடைமை கொண்டவராய், குறுநில மன்னராய்த் திகழ்ந்தனர். வறுமைச் சமூகத்தின் உழைப்பைச் சுரண்டிச் செல்வச் சமூகம் கொழுத்தது. வறியோர் எலியாக முயலாகக் கிடந்தார்கள். அஞ்சிக் கிடந்த அவர்களைப் புலிவேடம் போட்டு மேலும் அச்சுறுத்தினார் முதலாளிமார்கள்.

**நாலுபேர் கைகளில் கருவி ஏந்திப்**
**பாறைகளைப் புரட்டுகின்ற காட்சி**

அதோ நாலுபேர் வெயிலில் வேர்வை அருவிகள் பெருகக் கைகளில் கருவி ஏந்திப் பாறைகளைப் புரட்டுகின்றனர் பாருங்கள். அவர்களின் குழிந்த வயிறு ஒட்டிய கன்னங்கள் உலர்ந்த விழிகளைப் பாருங்கள். ஆனால் அங்கே குடைபிடித்துக் கொண்டு ஒருவர் கொழுத்த உடலோடு நிற்பதைக் காணுங்கள்! இந்தக் காட்சியைக் காணும் கவிஞனின் உள்ளம் கொதிக்கின்றது. இந்தச் சமுதாயம் மாற்றப்பட வேண்டுமெனக் கருதுகின்றார்.

> கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
> கொள்ளையடிப்பதும் நீதியோ? - புவி
> வாழ்வதுதான் எந்தத் தேதியோ?

(சாய்ந்த தராசு: 5-7, முதல் தொகுதி)

- **சமத்துவம் சாத்தியம்**

உலகம் இப்படியே இருந்துவிடாது என்றும் அவர் கருதுகின்றார். ஏழை கோழையாக இருக்கும் வரைதான் இந்த நிலை இருக்கும். அவன் தாழ்ந்து குனிந்து பணிந்து வாழும் நிலையிலிருந்து நிமிரும் நிலை வரும். அப்படி நிமிர்ந்தால் ஒரே நொடியில் உலகம் மாறிவிடாதா எனக் கேட்கின்றார். கையிலே திருவோடுதான் உண்டு என்று கூறும் ஓடப்பர் ஒருபுறம்; செல்வநிலையின் உச்சியிலே இருக்கும் உயரப்பர் மற்றொருபுறம். ஏழையப்பராக இருக்கும் ஓடப்பரும், உயரப்பரும் ஒன்றாக முடியுமா? முடியும் என்கிறார் கவிஞர்.

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
  உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
  ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ!

(உலகப்பன் பாட்டு: 37-40, முதல் தொகுதி)

அடி, உதை என்றாலே அஞ்சுவோர் கீழோர் அல்லவா? அந்த நிலையிலேதான் இவர்கள் சுரண்டிச் சுருட்டி வைத்திருக்கும் செல்வத்தைப் பிறரோடு பகிர்ந்து கொள்வார்கள். இயந்திரத்தில் இட்டுப் பிழிந்தால்தானே கரும்பு சாறுதரும்? உலகம் வழங்கும் உடைமை எல்லாம் பொது எனும் மனநிலை வரவேண்டுமென்று பாரதிதாசன் கருதுகின்றார். பொருளாதார நிலையில் ஒரு சமத்துவம் நிலவும் சமுதாயத்தையே அவர் காணவிரும்பினார்.

- **வறுமையின் காரணம்**

நெருப்பில் கூடக் கண்மூடித் தூங்கலாம்; வறுமை வசப்பட்டவன் தூங்க முடியாது என்றார் திருவள்ளுவர். கல்லுக்குள் வாழும் தேரைக்குக் கூட உணவு கிடைத்துவிடுகிறது; அருகம்புல்லுக்குக் கூட இயற்கை ஓர் ஆடையைச் சுற்றியிருக்கிறது. ஆனால் ஏழை மாந்தர்தம் நிலை என்ன?

கந்தை அணிந்தோம் - இரு
  கையே விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்
மொந்தையிற் கூழைப் - பலர்
  மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்

(தொழிலாளர் விண்ணப்பம்: 33-36, முதல் தொகுதி)

என்று கூறும் அளவிற்கு அவர்கள் நிலை தாழ்ந்து போய்விட்டது. ஒரு மொந்தைக் கூழைப் பலர் மொய்த்துக் குடித்தார்களாம். ஈக்கள் எறும்புகள் போல் எண்ணிக்கையில் பெருகிக் கிடப்பதனால் மொய்த்துக் குடித்ததாகச் சொல்கிறார். இந்த நிலைக்குக் காரணம் யாது? தலைவிதியா? அப்படிச் சொல்லித்தான் கடந்த காலத்தில் ஏமாற்றினார்கள். பாரதிதாசன் காணும் புதிய சமுதாயத்தில், பொதுவுடைமை மணம் பரப்பும் சமுதாயத்தில் அது நடவாது.

பாரதிதாசன் பகுத்தறிவு வாய்ந்த சமூகம் காண விரும்பினார். முன்னோர்கள் சொன்னதை ஆராயாமல், வேதவிதி என்றும், உலக வழக்கம் என்றும், சாத்திரங்கள் சொல்லியிருக்கின்றன என்றும் கூறியவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், அறிவில் எதனையும் ஆராயும் நிலை வேண்டுமென்றார். கடவுள் பெயர் கூறியும் மதங்களின் பெயர் கூறியும் ஏமாற்றும் வழக்கங்களைச் சாடி அறிவுமிக்க ஒரு சமுதாயம் தோன்றுவதற்கு அவர் குரல் கொடுத்தார்.

### 2.1.1 யார் படைத்த உலகம்?

உலகத்தை யார் படைத்தார்? கடவுள் படைத்தார் என்று சமய உலகம் கூறுகின்றது. கடவுள் படைத்த உலகம் சமமாக அல்லவா இருக்க வேண்டும் என்கிறார் கவிஞர். நடவு செய்பவனுக்கு நான்கணாக் கூலி; உடல் உழைப்பு இல்லாதவனுக்குக் கடல்போலச் செல்வம். இதுதான் கடவுள் ஆணையா? இப்படிப்பட்ட காட்சிகளைக் காணும் நேர்மையான மனிதர் யார்க்கும் நெஞ்சுக் கொதிப்பு வராதா?

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**

கெடுக உலகியற்றி யான் குறள் 1062

என்று திருவள்ளுவரும் கூறினார். பிச்சை எடுத்து வாழவேண்டியது சிலர்க்கு இவ்வுலகில் தலைவிதி என்றால் அப்படி விதித்தவன் அழிந்து தொலையட்டுமே என்று ஆற்ற முடியாத அளவு திருவள்ளுவர் கொதிக்கவில்லையா? அவரைப் போலவே பாரதிதாசனும் கொதித்துப் பேசுகிறார். உலகம் தொழிலாளரால் உருவானது என்று மனித அறிவு கற்பிக்க வேண்டும். காட்டை நாடாக்கினோமே! கழனி திருத்தி உழவு செய்தோமே! நாடுகளைப் படைத்தோமே! அங்கு நான்கு திசைகளிலும் வீதிகள் வகுத்தோமே! வீடுகள் கட்டினோமே! மலையைப் பிளந்தோமே! கடலைத் தூர்ந்தோமே! கப்பல்கள் செலுத்தினோமே! **தொழிலாளராகிய நாங்கள் படைத்ததல்லவா இந்த உலகம்** என்று கேட்கின்றனராம் புரட்சிக்கவிஞர் கண்ட தொழிலாளர்கள்.

## 2.1.2 எல்லார்க்கும் எல்லாம்

உலகத்தின் நலங்கள் எல்லாம் இயற்கையின் கொடை. அவற்றைப் பயன்தர உருச்சமைத்தனர் தொழிலாளத் தோழர். எல்லோரும் அவற்றைத் துய்த்தல் வேண்டும். "உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய்" என்பது பாரதிதாசன் கூற விரும்பும் அறிவுரை.

எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான
இடம்நோக்கி நடக்கின்றது இந்த வையம்

(பாண்டியன் பரிசு 56:4)

என்று அவர் பாடுகின்றார். எல்லார்க்கும் எல்லாம் என்று கருதுகின்ற உள்ளமே **தாயுள்ளம்** என்கிறார் அவர், வேறு ஓர் இடத்தில்:

தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்!

(உலக ஒற்றுமை: 13-15, முதல் தொகுதி)

என்று மக்களெல்லாம் ஒன்றாய்க் காணும் பேருள்ளத்தின் பண்பு கூறுகின்றார். உள்ளத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் மனப்பக்குவம் வந்துவிடின் அந்நாட்டில் ஏற்றத் தாழ்வுகளும் போட்டி, பொறாமை, பகை எனும் உணர்வுகளும் தோன்றமாட்டா. ஆனால் அப்படிப்பட்ட உலகை அடைவதுதான் எளிதா? கவிஞர்களின் இலட்சியக் கனவாக அன்றோ விளங்குகின்றது அவ்வுலகு!

இராமலிங்க வள்ளலார், ஒத்தார், உயர்ந்தார், தாழ்ந்தார் ஆகிய மூவரும் ஒன்றாய்க் கூடி உலகியல் நடத்த வேண்டும் என்று கூறுகின்றார். பலரும் கூறியிருப்பினும் பாரதிதாசனே பணக்காரர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் குரலில் பொது உடைமையை ஒத்துக் கொள்ளுமாறு பாடியவர் ஆவார்.

இப்பொழுதே நீர் - பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே - எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறு முன்பே

(தொழிலாளர் விண்ணப்பம்: 53-56, முதல் தொகுதி)

என்று தொழிலாளர் சினங்கொண்டு கூறுவதாகப் பாடிய முதல் கவிஞர் அவரே.

### 2.1.3 கொலைவாளினை எடு

புரட்சிக் கவிஞர் சமுதாயத்தில் எப்பாடு பட்டேனும் சமநிலையைக் கொண்டுவந்து விட வேண்டுமென்று விரும்பினார். ஆமையாய், ஊமையாய் அடங்கிக் கிடக்கும் ஏழைகளின் நிலையை எடுத்துரைக்கும் வன்மை மிக்க குரலாக அவர் குரல் வெளிப்பட்டது. தமிழனே! நீ புலிக்குணம் உடையவன் என்று வரலாறு கூறுவது பொய்யாய்ப் போகலாமா? உனது அதிகாரத்தை நிறுவக் கொலைவாளினை எடு என்கிறார்.

**வலியோர் சிலர் எளியோர்தமை**
**வதையே புரிகுவதா**
**மகராசர்கள் உலகாளுதல்**
**நிலையாம் எனும் நினைவா?**
**உலகாள உனதுதாய் மிக**
**உயிர்வாதை அடைகிறாள்**
**உதவாதுஇனி ஒருதாமதம்**
**உடனேவிழி தமிழா!**

(வாளினை எடடா! 1-8, முதல் தொகுதி)

பாட்டின் நடையில் ஒரு வீறு, வீரக்கொப்பளிப்புத் தெரிகிறது பாருங்கள். பன்னெடுங்காலமாக உலகச்சமத்துவத்தை வேண்டுகோள் முறையிலும், அறிவுறுத்தல் முறையிலுமே சான்றோர்கள் உரைத்து வந்த நிலையைக் கவிஞர் மாற்றினார். இதில் என்ன கெஞ்சுவது? இனி எவர் மிஞ்சுவது? என அடங்காச் சினம் கொண்டெழுந்த போர்க்குரலாக அவர் பொதுவுடைமைப்பாடு எண்ணம் பலருடைய குருதி நாளங்களிற் புகுந்து புரட்சி வேகத்தை உண்டாக்கிவிட்டது.

### 2.1.4 சமத்துவப் பாட்டு

சமத்துவப் பாட்டு பாரதிதாசன் காணவிரும்பிய சமுதாயத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதம் நிலையாக நீங்கிச் சமத்துவம் இடம்பெற வேண்டுமென்று கூறினார். இதற்கு அடிப்படையில் பிறப்பால் உயர்வு தாழ்வு பேசும் பேதைமை ஒழியவேண்டுமென்று கூறினார். மனிதர் எல்லாரும் சமம் என்ற கோட்பாட்டை உடைத்துவிட்ட அயலாரின் சூழ்ச்சியை அவர் கடுமையாகச் சாடினார். பாவம், புண்ணியம், மேல் உலகம், கீழ் உலகம், சொர்க்கம், நரகம் என்றெல்லாம் கூறி அறியாமைப் பள்ளத்தில் பலரைப் புதைத்துவிட்ட சூழ்ச்சியைப் பாரதிதாசன் போல யாரும் வெளிப்படுத்தவுமில்லை; கண்டிக்கவுமில்லை. யார் தாழ்ந்தவர்கள்? என்ற வினாவுக்கு உழைக்கின்றவர்களே தாழ்ந்தவர்கள் என்று உண்டாக்கி விட்ட வருணப் பாகுபாட்டைப் புரட்சிக் கவிஞர் 'சமத்துவப்பாட்டு' என்ற தலைப்பில் கண்டித்து எழுதுகின்றார்.

**பொய்மை வருணபேதம்**
**போனால் புனிதத்தன்மை**
**நம்மில்நாம் காண்போமடி - சகியே**
**நம்மில் நாம்காண்போமடி!**

(சமத்துவப்பாட்டு: 365-368. மூன்றாம் தொகுதி)

என்று கூறுவதைக் கேளுங்கள். பாரதிதாசன் காண விரும்பிய சமுதாயத்தில், சாதி, மதம், தீண்டாமை, பிறப்பில் உயர்வு தாழ்வு ஆகியவற்றுக்கு இடமே இல்லை.

### 2.2 மதவேறுபாடு நீங்குக

மதவேறுபாடுகளால் உலகம் பல குழப்பங்களையும் போர்களையும் சந்தித்திருக்கிறது. மதங்களுக்கிடையே வேறுபாடுகள், மதங்களுக்கு உள்ளேயே வேறுபாடுகள் தோன்றிக் கிளைத்து அசுரவல்லமை

பெற்று மனிதநேயம் என்ற மாபெரும் தத்துவத்தை அழித்துக் கொண்டிருக்கின்றன. இந்தப் போரில் யாரும் ஈடுபடல் கூடாது என்கிறார் பாரதிதாசன்.

**சேசு முகம்மது என்றும் – மற்றும்**
**சிவனென்றும் அரியென்றும் சித்தார்த்தனென்றும்**
**பேசி வளர்க்கின்ற போரில் – உன்**
**பெயரையும் கூட்டுவர் நீஒப்ப வேண்டாம்.**

(வாழ்வில் உயர்வுகொள்: 11–14, முதல் தொகுதி)

என்று அறிவுரை கூறுகின்றார். மனிதனின் வறுமையை அகற்ற இந்தப்போர்கள் பயன்பட மாட்டா; அறிவை வளர்க்கவும் இவை உதவமாட்டா என்பது அவர் கருத்து. சமயத்துறைகளிலே இருந்த பலர் இக்கருத்தைக் கூறி இருந்தாலும், மத உலகிலிருந்து மனிதனை விடுவிக்கும் ஓர் அறிவுப் போரைப் பாரதிதாசனே தொடங்கி வைத்தவர் எனலாம். பொருளாதார அடித்தட்டிலே இருக்கும் மனிதனை அவன் உயர்வுக்காகப் போராடாமல் தடுத்தது மதம்; வறுமைப் பள்ளத்திலே இருக்கும் பலரை வழிபாடு, அருச்சனை, விழா, வேள்வி, தலப்பயணம், கழுவாய் தேடல் போன்ற முயற்சிகளுக்காகச் செலவழிக்கத் தூண்டியது. மீள முடியாத துன்பச் சுமை தமக்குப் பழைய பிறவிகளில் செய்த கருமங்களின் விளைவாக வந்தது என்று மதம் கற்பித்தது. கடவுள்தான் இதற்கு அருள்செய்ய வேண்டுமென்று மதவாத நூல்கள் கூறின. இந்நிலையிலேதான் பாரதிதாசன் **கடவுள் மறுப்புக் கொள்கை**யை நோக்கிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. மதம் மனிதகுலத்தின் அமைதியைக் கெடுத்துவிடும் என்ற நிலையில் உலகை நோக்கிக் கவிஞர் இரு விளக்கங்களைக் கேட்கிறார்.

சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?
சமயபேதம் வளர்த்தே தளர்வது நன்றா?

(ஆய்ந்துபார்: 1-2, முதல்தொகுதி)

எது நன்று? அமைதியால் உலகம் தழைப்பது நன்று என்றுதானே உலகம் கூறும்.

### 2.2.1 மதங்களால் மடமை

மதங்கள் மனிதரின் அறிவைத் தேய்த்து விடுகின்றன என்று பாரதிதாசன் கருதினார். மதம் அறிவில் மயக்கத்தை உண்டாக்கும்; நாட்டில் தீமை என்ற எரிமலையைப் புகைய விடும்; இது நலம் இது தீயது என்று பகுத்துப் பார்க்கும் அறிவை இழக்கச் செய்யும் என்று அவர் கூறுகின்றார்.

மதம்என்ற கருங்கற் பாங்கில்
மல்லிகை பூப்ப தில்லை
மதியினில் மயக்கம் என்ற
நஞ்சொன்றே மலரும்! நாட்டில்
புதியதோர் பொல்லாங்கு என்னும்
எரிமலை புகையும்; மக்கள்
இதுநலம் இதுதீது என்னும்
எண்ணமும் இழந்து போவார்.

(குறிஞ்சித்திட்டு 20: 193-200)

இந்தப்பாட்டை எண்ணுங்கள். கவிஞர் என்ன கூறுகிறார் தெரிகிறதா? மதம் ஒரு கருங்கல்லாம். கருங்கல் பாறையில்

மல்லிகை பூக்குமா என்று கேட்கிறார். சிந்தனைகள் பூக்காமல் மடமை என்ற முட்கள் தோன்றச் செய்துவிடும் மதங்கள் மனித குல நலனுக்கு ஏற்றவை அல்ல என்பது அவர் கருத்து.

> நாய்களைப் போல்தமக் குள்ளே-சண்டை
> நாளும் வளர்க்கும் மதங்கள்

(வாழ்வு: 19-20. இரண்டாம் தொகுதி)

என்றும் அவர் எடுத்துரைப்பதைப் பாருங்கள்! மதத்தை வளர்ப்போர் மனிதர்களின் சிந்தனையை முடக்கி விட்டதை அவர் எடுத்துக் காட்டினார். "கட்டிச் சமூகத்தின் கண் அவித்து" விட்டதாக மதங்களின் மீது அவர் குற்றம் சாட்டினார். மதங்களின் சார்பாகத் தோன்றிய புராணங்களில் சொல்லப்பட்ட அறிவுக்கொவ்வாத நிகழ்ச்சிகளை அவர் இகழ்ந்துரைத்தார்.

### 2.2.2 மக்கள் நலம் பேணுக

- **மன்னர் ஆட்சியும் மக்கள் சக்தியும்**

எந்த அமைப்பும் மக்களின் நலம் காப்பதாக அமைய வேண்டும் என்று பாரதிதாசன் கருதினார். சமுதாய நலம் படைப்பதற்கு மன்னராட்சி இடையூறாக இருப்பின் மக்கள் கிளர்ச்சி செய்து அதனை மாற்ற வேண்டும் என்று கவிஞர் கருதினார். பாரதிதாசன் பாடல்கள் பலவற்றில் மன்னராட்சிக்கு எதிரான கிளர்ச்சி சித்தரிக்கப் பெறுவதைக் காணலாம்.

(கடல்மேற்குமிழிகள்: 17,19-20, மூன்றாம் தொகுதி)

என்று கூறி மக்கள் எல்லாரும் ஒன்றாய்த் திரண்டுக் குடியரசை நாட்டுதல் நன்று என அறிவுறுத்துவதைக் '**கடல்மேற் குமிழிகள்**' என்ற அவர் படைப்புக் காட்டுகின்றது.

'**புரட்சிக்கவி**' என்ற சிறுகாப்பியத்தில் உதாரன் என்ற கவிஞன் கொலைக்களத்தில் நிற்கின்றான் அவன் தலையை வெட்டுவதற்குக் கொலையாளிகள் காத்திருக்கின்றனர். அப்போது உதாரன் மக்களை நோக்கிப் பேசுகின்றான். 'என் நாடு உரிமை பெற்று வாழவேண்டும்; கொடுங்கோன்மை வீழ வேண்டும்' என்று முழங்குகின்றான். மக்கள் சக்தி இந்த உரைகேட்டுத் திரள்கின்றது. கொலையாளிகளிடமிருந்து உதாரனை மீட்கின்றது.

- **மதத்தலைவர்களுக்கு ஓர் அறைகூவல்**

மன்னராட்சி பெரும்பாலும் மக்கள் நலம் காப்பதில்லை. மன்னர்கள் மதவாதிகளால் வழிநடத்தப் பெறுகின்றனர். மதவாதிகள் நாட்டுமக்கள் ஒன்றுகூடாமல் இருப்பதற்காக விதி, தலையெழுத்து, ஆண்டவன் கட்டளை, ஆகியவற்றை உருவாக்கி விட்டனர். பாரதிதாசன் இவற்றை எல்லாம் எதிர்ப்பதில் தீவிரம் காட்டினார்.

வடிகட்டி எம்மைத் துடிக்க விட்டீரே!

(தொழிலாளர் விண்ணப்பம்: 41-46, முதல் தொகுதி)

என்று மதத்தலைவர்களுக்கு மக்கள் அறைகூவல் விடவேண்டும் என்று கூறுகின்றார்.

### 2.2.3 சான்றோர் நெறி அறிக

பாரதிதாசன் மதங்களால் விளைந்த கொடுமைகளை எதிர்த்தார். மதத்தலைவர்கள் தங்கள் மதமே உயர்ந்தது என்று கூறி மற்ற மதங்களைத் தாக்க முனைந்தமையால் உண்டான தீங்கை எடுத்துரைத்தார். மதம் சார்ந்தவர்களில் சிலர் சீர்திருத்தக்காரர்களாக இருந்தனர். அவர்களைப் பாரதிதாசன் போற்றினார். புத்தரை அவர் போற்றிப்பாடினார் :

தன்னேரிலாப் புத்தர் நெறியை வீழ்த்தித்
தம்சமயம் மேலோங்கச் செய்யும் சூழ்ச்சி
நன்றாமோ? உலகுக்குக் கொல்லா நோன்பை
நடுவாய்ந்து முதற்புகன்றோர் புத்தர் தாமே!

(புத்தர் புகன்றார் இல்லை: 29-32, நான்காம் தொகுதி)

என்று புத்தர் அருள் உணர்வின் அடிப்படையில் உயிர்களைக் கொல்லாதீர், புலால் உணவு தவிர்ப்பீர் என்று கூறியதைப் பாரதிதாசன் காட்டுகின்றார். பாரதிதாசன் புலால் உண்பவரே ஆயினும் அவர் உள்ளம் கொல்லாமையில் பிடிப்புக் கொண்டிருந்தது. குடும்பவிளக்கு நூலில் அவர் பல்வேறு சமையல் பக்குவங்களை எடுத்துரைக்கின்றார். அவற்றில் ஒன்றுகூடப் புலால்

வகை சார்ந்தது இல்லை. பாரதிதாசன் இராமலிங்க வள்ளலாரையும், ராமானுசரையும் ஏற்றுக் கொண்டவர். குமரகுருபரரையும் அவர் பாடிய மீனாட்சி அம்மைப் பிள்ளைத் தமிழையும் பாரதிதாசன் 'எதிர்பாராத முத்தம்' என்ற நூலில் பாராட்டுகின்றார். இச்சான்றோர்கள் கற்பித்த நெறியை எல்லோரும் அறிந்து பின்பற்ற வேண்டுமென்று பாரதிதாசன் விரும்பினார்.

### 2.3 சாதிகள் ஒழிக

'சாதி' என்ற சொல்லே தமிழுக்கு உரியதில்லை, பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் சாதிப் பிரிவுகள் பழந்தமிழகத்தில் இல்லை.

**சாதி மதம் தமிழ் இல்லை - அந்தச்**
**சாதி மதத்தைத் தமிழ்கொள்வ தில்லை.**

பன்மணித்திரள் (பக்: 67)

என்பது பாரதிதாசன் கூற்று. தமிழ்நாட்டில் சாதி வேரூன்றி வளர்ந்து விட்டது. பெயருக்கப் பின்னால் சாதியைக் குறித்து வழங்குவதை மதிப்பாகச் சமூகம் கருதியது. தெருக்களின் பெயர்களில் கூட சாதிப்பெயர்கள் ஆட்சி கொண்டிருந்தன. மேல்சாதி கீழ்ச்சாதி என்ற பாகுபாடு பலருடைய உள்ளத்திலும் உணர்விலும் இருந்தது.

தீண்டாமை என்ற கொடிய வழக்கம் தமிழகத்தின் முன்னேற்றத்தை வெறும் கனவாக்கிக் கொண்டிருந்தது. சாதி நம் பண்பாட்டுக்கு முரண் என்று கூறிய பாரதிதாசன் சாதி இருக்கின்றது என்று கூறுவோன் இன்னும் உயிர் வாழ்கின்றானே என்று துடிக்கின்றார்.

இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே!

(பாண்டியன் பரிசு, 56: 17-18)

என்று அவர் பாடுகின்றார். சாதிகளை ஒழிப்பதற்குக் கவிஞர் கொடுத்த குரல் தமிழ் நாடெங்கும் பரவியது. அவர் அச்சமின்றிச் சாதிகளைச் சாடினார்; வாழ்நாள் முழுதும் சாதி ஒழிப்புப் போர் நிகழ்த்தினார்.

### 2.3.1 வருணக் கொடுமைகள் கெடுக

மனித குலத்தை நான்கு வருணங்களாகப் பிரித்து அவற்றிற்கு உயர்வு தாழ்வு கற்பித்த கொடுமை நாட்டில் பரவிவிட்டது. கடவுளின் முகத்தில் தோன்றியவர் ஒரு வருணத்தார்; தோளில் தோன்றியவர் இரண்டாவது வருணத்தார்; இடையிற் பிறந்தவர் மூன்றாவது வருணத்தார்; தொடையிற் பிறந்தவர் நான்காம் வருணத்தவர் என்று அயல்மொழியாளர் கற்பித்த நெறி தமிழ் நாட்டிற்குள் புகுந்து விட்டது. பலர் இதை உண்மையாக இருக்கக்கூடுமென நம்பிவிட்டனர்.

ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாற முடியும். ஆனால் ஒரு வருணத்தவர் மற்றொரு வருணத்தவராக மாற முடியாது. இராமானுஜர், சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் தாழ்ந்த வருணத்தவரை உயர்ந்த வருணத்தவராக மாற்ற முயன்றனர். பாரதிதாசனும் வர்ணக் கொடுமையை எதிர்க்கப் புயலாகப் புறப்பட்டார். வருணங்கள் உண்டாக்கப்படுவதற்கு முன்பு உலகம் ஒழுங்காய் இருந்தது; பல முன்னேற்றங்களைத் தொழிலாளர் உழைப்பால் உலகம் கண்டது. வருணங்கள் உண்டாக்கப்பட்ட

பின்பு மனிதரிடையே வேற்றுமைகள் வளர்ந்தன.

இக்கால நால்வருணம் அன்றி ருந்தால்
இருட்டுக்கு முன்னேற்றம் ஆவ தன்றிப்
புக்கபயன் உண்டாமோ?

(புரட்சிக்கவி: 426-428, முதல் தொகுதி)

என்று கேட்கிறார். ஒவ்வொரு வருணத்தவருக்கும் ஒரு நீதி உரைக்கப்பட்டது. சட்டை அணிந்து கொள்வதும், செருப்பணிந்து கொள்வதும் கூட குறிப்பிட்ட வருணத்தவர்க்கு ஒவ்வாத செயல்களாக உரைக்கப்பட்டன. கீழ்வருணத்தவரைச் 'சூத்திரர்' என்று இகழ்ந்தனர். இந்திய ஒருமைப்பாட்டை வருணப் பாகுபாடு குலைத்துவிடுமென்று பாரதிதாசன் எச்சரித்தார். அவருடைய நெருப்புக் கவிதைகளால் வருணப்பாகுபாடு சுட்டுப் பொசுக்கப்பட்டது.

## 2.3.2 தீண்டாமை வீழ்க

தொட்டால் தீட்டு, பட்டால் பாவம் என்ற கருத்தை வருணப் பாகுபாட்டைப் பரப்பியவர்கள் விதைத்தார்கள். உழைக்கும் தொழிலாளர்களை இப்பாகுபாடு 'பஞ்சமர்' என்று கண்டது. பஞ்சமர் என்றால் நான்கு வருணத்திற்கும் அப்பாற்பட்ட ஐந்தாவது தாழ்ந்த பிரிவினர் என்பது பொருள். தொழிலாளி உருவாக்கிய நெல்லுக்கும். காய்கறிகளுக்கும், பாலுக்கும், தயிருக்கும், கனிகளுக்கும் தீட்டு இல்லை. ஆனால் உயர்ந்த வருணத்தார் வாழும் தெருக்களிலே நடக்கும் உரிமை அற்றிருந்தான். அவனைத் தொட்ட தீட்டை நீரில் மூழ்கித் துடைத்தனர் மேல்வருணத்தவர்.

சதுர்வர்ணம் சொன்னபோது

தடிதூக்கும் தமிழ்மக்கள்
அதில் ஐந்தாம் நிறமாயினர் - சகியே
அதில் ஐந்தாம் நிறமாயினர்.

(சமத்துவப்பாட்டு: 381-384, மூன்றாம் தொகுதி)

என்று அதனை ஒழிக்க முயன்றவர்களைப் 'பஞ்சமர்' என்று ஒதுக்கிவைத்தது மேல்குலம். வரலாற்றில் தீண்டாமை நீண்ட காலமாக இடம் பெற்றுப் பல கொடுமைகளை இழைத்து விட்டது. நந்தனாரையும் திருப்பாணாழ்வாரையும் அது கோயிலுக்குள் புகவிடாமல் தடுத்தது. எலிகளும், பெருச்சாளிகளும் ஓடி உலவும் கோயிலுக்குள் உயிரும் உணர்வும் உள்ள மனிதர்கள் புகுதல் தடுக்கப் பெற்றது.

தீண்டாமை என்னுமொரு பேய் - இந்தத்
தேசத்தினில் மாத்திரமே திரியக் கண்டோம்

(ஞாயமற்ற மறியல்: 17-18, மூன்றாம் தொகுதி)

என்று கவிஞர் கூறினார். கவிஞரின் எரிமலைக் கவிதைகள் தீண்டாமை நீங்கப் பெரும் புரட்சி செய்தன. தீண்டாமை சட்டப்படிக் குற்றமாக்கப்பட்டது. இன்று நாகரிக மனிதர்கள் தீண்டாமையை ஏற்கவில்லை.

### 2.3.3 சாதியற்ற சமூகம் மலர்க

சாதி என்பது ஓர் இருட்டு. அந்த இருட்டு அகன்றாலே உலகம் விடியும். இந்தக் கருத்தைப் பாரதிதாசன் குழந்தைகளின் தாலாட்டுப் பாட்டிலேயே சேர்த்துரைத்தார்.

வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய் துலங்கும் பெருமாட்டி

(பெண்குழந்தை தாலாட்டு: 17-18, முதல் தொகுதி)

என்று பெண்குழந்தையைத் தாலாட்டுகின்றார். சாதி எங்கே பெரிய தடையை விதித்தது தெரியுமா? ஆணும் பெண்ணும் காதலிப்பார்கள்; உயிர் ஒன்றிய நிலையில் அவர்களிடையே அன்பு பெருகும்; காதல் செழிக்கும்; அப்போது அந்தக் காதல் என்ற பச்சை மரத்தை வெட்டச் சாதிக் கோடரி நீளும்.

காதல் இருவர்களும் - தம்
கருத்தொருமித்தபின்
வாதுகள் வம்புகள் ஏன்? - இதில்
மற்றவர்க் கென்ன உண்டு?
சூதுநிறை உளமே - ஏ
துட்ட இருட்டறையே!
நீதிகொள்' என்றுலகை - அவள்
நிந்தனை செய்திடுவாள்.

(காதற் பெருமை: 65-72. முதல் தொகுதி)

என்று ஒரு காதலி புலம்புவதைக் கவிஞர் ஓவியம் செய்கின்றார். சாதிப் பாகுபாட்டால் எத்தனைக் காதலர்கள் நஞ்சருந்தினர்? ஆற்றிற் பாய்ந்தனர்? கடலில் மூழ்கினர்? தீயிற் குளித்தனர்? இன்னும் இப்படிப்பட்ட செய்திகளுக்குச் செய்தித் தாள்களில் இடமில்லாமல் போகவில்லை. கவிஞர் சாதி ஒழியக் கலப்புமணம் நல்ல தீர்வு என்று கருதினார். அவர் எழுதிய ‘பாண்டியன் பரிசு’ என்னும் காவியத்தில் இளவரசி அன்னம் என்பவள் தன் திருமணத்தைக்

குறித்துக் கூறுகையில் ‘இவ்வுலகில் எல்லோரும் நிகரே’ என்கிறாள். திருமணத்திற்குச் சாதி பார்க்கக் கூடாது என்பதைத் தெளிவுபடுத்துகிறாள். சாதியற்ற சமூகம் கவிஞரின் கனவு. அக்கனவு மெல்ல மெல்ல உருவாகி வருகின்றது.

## 2.4 மூடப்பழக்கங்களை அழிப்போம

தமிழ்ச் சமுதாயம் பகுத்தறிவுப் பாதையிலிருந்து விலகி மூடப்பழக்கங்கள் என்ற குழிகளில் விழுந்து விழுந்து நலிந்து கொண்டிருந்தது. அதனை அவ்வப்போது கரையேற்றும் முயற்சிகள் இருந்தன. எனினும், அக்குழிகளைத் தூர்த்துப் பகுத்தறிவு நெறியில் செலுத்தும் பணியைப் பெரியார் இராமசாமி ஏற்றார். தொடக்கத்தில் கல்லெறியும் சொல்லெறியும் அவர்க்குக் கிடைத்தன. இதோ அவர் உருவத்தைக் கவிஞர் வருணிப்பதைப் பாருங்கள்!

தொண்டு செய்து பழுத்த பழம்
  தூயதாடி மார்பில் விழும்
மண்டைச்சுரப்பை உலகு தொழும்
  மனக்குகையில் சிறுத்தை எழும்!

(பெரியார்!: 16-19)

‘பகுத்தறிவுப் பகலவன்’ என்று மக்களால் போற்றப் பெற்ற பெரியார் குழந்தை மணம், கட்டாய மணம், வைதிகச் சடங்குகள், சோதிடம் ஆகியவற்றைச் சாடினார். பாரதிதாசன் இந்த மூடப்பழக்கங்களைக் கவிதை மூலம் தாக்கிப் பலரை விழிப்புறச் செய்தார்.

ஓடுவதென்றோ? உயர்வது என்றோ ?

(சஞ்சீவி பர்வதத்தின் சாரல்: 397-401, முதல்தொகுதி)

## 2.4.1 குழந்தைமணக் கொடுமை

பால்ய மணம் என்று சொல்லப்பட்ட குழந்தை மணம் இந்தியா முழுவதும் வழக்கத்தில் இருந்தது. வைதிக நெறி இந்த வழக்கத்தைப் புகுத்தியது. சாதிவிட்டுச் சாதி திருமணம் நடப்பதைத் தடுக்கவே இந்த அகமண முறை (சாதிக்குள்ளேயே திருமண முறை) அமைந்தது. ஆனால் இதன் பின்விளைவுகள் எவ்வாறு இருந்தன? மணம் செய்து கொண்ட சிறுவன் இறந்து விட்டால் சிறுமி கைம்பெண் ஆகிவிடுவாள். அவளுக்கு அறிவு முதிர்ந்து பருவம் அடைகின்றபோது தாங்காத துயரம் அவளைச் சேரும். அவள் வெள்ளைப் புடவை உடுத்த வேண்டும். யார் முன்னிலையிலும் வரக்கூடாது; வந்தால், அபசகுனம் (கருதிச் செல்லும் செயல் நடைபெறாது) என்று பொருளாகுமாம். மங்கலமான செயல்களுக்கு அவள் ஒவ்வாதவள். அவள் நெற்றியில் குங்குமப் பொட்டிடுதலோ, கூந்தலில் மலர் சூடுதலோ கூடாது. அப்படிப்பட்ட ஒருத்தி வளர்ந்த பின் காதல் கொண்டதைக் கண்டு தாய் கொதித்துப் பேசுகிறாள்; காதலனின் தாயும் அவர்கள் காதலை ஏற்க மறுக்கிறாள். கவிஞர் அதனைக் காட்டுகிறார் பாருங்கள்!

பெற்ற இளந்தலைக் கைம்பெண்ணடீ ! -
என்ன பேதைமை என்றனள், மங்கையின் தாய்.
சிற்சில ஆண்டுகள் முற்படவே - ஒரு
சின்னக் குழந்தையை நீ மணந்தாய்;
குற்றம் புரிந்தனை இவ்விடத்தே -
அலங் கோலமென்றாள் அந்தச் சுந்தரன் தாய்
புற்றரவு ஒத்தது தாயர் உள்ளம் -
அங்குப் புன்னகை கொண்டது மூடத்தனம்.

(காதற்குற்றவாளிகள்: 41-48. முதல் தொகுதி)

இவ்வாறு உள்ளத்தில் படியுமாறு சொல்லிச் சொல்லி இன்று இந்த வழக்கம் பெரும்பாலும் ஒழிந்துவிட்டது.

### 2.4.2 கிழவனுக்கு மணமா?

வயது முதிர்ந்தவர் இளம்பெண்களை மணக்கும் கொடுமையும் நாட்டில் இருந்தது. வறுமை காரணமாக ஒருவன், தன் மகளை கிழவன் ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்துவிடுகிறான். மகளைப் பெற்ற தாய் தன்மகள் வாழ்க்கையைப் பார்க்கிறான், என்ன கொடுமை! நரைத்த தலை; சோர்ந்த உடல்; மருமகக் கிழவன் பள்ளியறையில் வாயெச்சில் ஒழுகத் தூங்கிக் கிடக்கிறான். மகள் என்ன செய்தாள் தெரியுமா? பாலில் நஞ்சு கலந்து குடிக்கப் போனாள். தாய் ஓடித் தடுத்தாள். என்னைச் சாகவும் விடாத பாழுந்தாயே! என்று மகள் குமுறினாள். தாய், சமூக அமைப்பைத் தூற்றுகிறாள்.

மண்ணாய்ப் போக! மண்ணாய்ப் போக!
மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப் போக!

சமூகச் சட்டமே! சமூக வழக்கமே!

நீங்கள், மக்கள் அனைவரும்

ஏங்கா திருக்க மண்ணாய்ப் போகவே!

(மூடத்திருமணம்: 46-51. முதல்தொகுதி)

என்று துயரம் தாங்காது புலம்புகிறாள். பொருந்தா மணம் என்பது செல்வர்கள் தம் பணவலிமையில் சமூகத்தில் இழைக்கும் கொடுமையாக இருந்தது. இவ்வழக்கம் பெரும்பாலும் இன்று ஒழிந்தது.

### 2.4.3 சோதிடம் இகழ்

மனிதனின் உழைப்பும் முயற்சியும் இகழப்பட்டன. மனிதனின் வாழ்வை முடிவு செய்வன வானில் உள்ள கோள்களே என்று கூறிய சோதிடம் வாழ்க்கை வழிகாட்டி ஆகிவிட்டது. குருப்பெயர்ச்சி, சனிப்பெயர்ச்சி என்று கூறி மக்கள் அலையத் தொடங்கினர். நவக்கிரகங்கள் என்று கூறப்பட்ட ஒன்பது கோள்களுக்கு உரிய சிறப்புத் தலங்களுக்குப் பயணம் மேற்கொண்டு கழுவாய்த் தேடினர். திருமணம் செய்யத் தடையாகச் ‘செவ்வாய் தோஷம்’ என்பது

கூறப்பட்டது. மனிதனின் ஜாதகத்தில் செவ்வாய்க்கோள் இருக்குமிடம் கொண்டு இந்தச் ‘செவ்வாய்தோஷம்’ என்பது முடிவு செய்யப்பட்டது. ஒருநாளில் ஆகாத நேரம் என்று இராகுகாலம் ஒன்றரை மணி நேரமும் எமகண்டம் ஒன்றரைமணியும் ஒதுக்கப்பட்டன. வாரசூலை, அட்டமி, நவமி, பரணி, கார்த்திகை என்று பயணத்திற்கு ஒவ்வாத நாட்களின் பட்டியல் போடப்பட்டது. இப்படிப்பட்ட நம்பிக்கைகள் கொண்ட குடும்பம் முன்னேறுமா? பாரதிதாசன் ‘இருண்டவீடு’ என்னும் நூலில் இத்தகைய மூடநம்பிக்கைகளால் கெட்டழிந்த

குடும்பத்தைக் காட்டுகின்றார். ‘நல்லமுத்துக் கதை’ யின் வழியாகச் சோதிடம் கூறுவானின் பொய்ம்மை வெளிப்படுத்தப் படுகின்றது.

**ஆடியில் திருமணம் கூடுதல் உறுதி**

(நல்லமுத்துக்கதை: 53, மூன்றாம் தொகுதி)

என்கிறார் சோதிடர். ஆடி மாதத்தில் எப்படிக் கூடும் என்று மற்றவர் கேட்கிறார். ஏனெனில் சாத்திர வழக்கப்படி ஆடி மாதத்தில் திருமணம் நடத்துதல் இல்லை. உடனே சோதிடம் கூறுபவர் விழித்துக் கொள்கிறார்.

**ஆடி கடைசியில் ஆகும் என்றால்**
**ஆவணி முதலில் என்றுதான் அர்த்தம்**

(நல்லமுத்துக்கதை: 55-56, மூன்றாம் தொகுதி)

என்கிறார். இப்படி ஏமாற்று வேலை நிகழ்கிறது. இச்சோதிடம் இகழத் தக்கது என்று உணர்த்துகிறார் பாவேந்தர்.

## 2.5 சுயமரியாதைச் சமூகம்

பாரதிதாசன் காணவிரும்பிய தமிழ்ச் சமுதாயம் சுயமரியாதை மிக்கதாக இருக்க வேண்டுமென்று விரும்பினார். தமிழ், தமிழர், தமிழ்நாடு இவற்றின் பெருமைக்குக் குறைவு வராமல் இருத்தல் வேண்டும். தொழிலாளர் உழைப்புக்கு மதிப்பளித்தல் வேண்டும். பெண்ணுலகு தலை நிமிர்ந்து வாழ வேண்டும். அடிமையாகிக் கிடக்காமல் மனிதரெல்லாரும் உரிமை பெற்றுத் திகழ வேண்டும். இவையே அவர் விரும்பிய சுய மரியாதைச் சமூகத் தன்மைகள். சுயமரியாதைச் சமூகத்தில் உயர்வென்றும் தாழ்வென்றும்

இல்லை;

அங்கு மக்கள் எல்லாரும் சமம். மனிதனை அடிமைப்படுத்துவதற்குரிய கருவிகளான சாதி, மதம் ஆகியவற்றுக்கு அங்கு இடமில்லை.

### 2.5.1 உழைப்பவர் உயர்க

உழைப்பவரால் உருவானது இந்த உலகம், தொழிலாளர் யாவரினும் உயர்ந்தோராகக் கருதத் தக்கவர். ஆனால் சமுதாயத்தில் அவர்கள் நிலை என்ன? அதோ வானத்தைப் பாருங்கள் ! விண்மீன்கள்; இந்த விண்மீன்களைப் பூக்கள் என்றும் வைரங்கள் என்றும் சோளப் பொரிகள் என்றும் வான மகளின் சிமிட்டும் கண்கள் என்றும்தான் கவிஞர்கள் எல்லாம் பாடினார்கள்.

பாரதிதாசன் மீன்களை எப்படிப் பார்க்கிறார் தெரியுமா? அவை வானத்தில் ஏற்பட்ட கொப்புளங்கள் என்கிறார். ஏன் கொப்பளித்தது? தொழிலாளர் பகல் பொழுது முழுதும் உழைத்து அந்தியிலே தங்கள் உரிமையைக் கேட்ட போது முதலாளிகள் சீறினார்கள்; வசை பொழிந்தார்கள்; இதனைக்கண்டு வானம் கொப்பளித்து விட்டது என்கிறார்.

மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்; உரிமை கேட்டால்

கண்டுகண்டு அந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!

(அழகின் சிரிப்பு)

என்பது பாவேந்தர் பாட்டு. சித்திரச் சோலைகள் உருவாக எத்தனைத் தோழர்கள் இரத்தம் சொரிந்திருப்பார்கள்! நெல்விளையும் நிலங்களுக்கு எத்தனை மனிதர் வியர்வை இறைத்திருப்பார்கள்! தாமரை பூத்த தடாகங்களைச் சமைக்க எத்தனை மாந்தர் மண்ணுக்கடியில் புதைந்திருப்பார்கள்! நெடும்பாதைகள், ஆர்த்திடும் இயந்திரக் கூடங்கள், ஆகியன எல்லாம் தொழிலாளர் உழைப்பால் மலர்ந்தவை அன்றோ! இவர்கள் நிலைமாறப் புதிய உலகு படைக்க வேண்டுமென்று கூறுகிறார் கவிஞர். கோடரிக்காரனைக் காதல் தலைவனாகப் படைத்த பெருமை பாரதிதாசனுக்கு உண்டு. கூடைமுறம் கட்டுவோர், பூக்காரி, குறவர், ஆலைத்தொழிலாளி, உழத்தி, சுண்ணாம்பு இடிப்போர், ஆகியோரின் ஏற்றத்தைப் பாடிய கலைஞரும் அவரே.

### 2.5.2 புரட்சித் திருமணம்

பழந்தமிழர் திருமணத்தில் வேதமந்திரங்களோ, தீ வளர்த்தலோ, தாலி அணிவித்தலோ இல்லை. இடையில் புகுந்த இந்த வழக்கங்கள் இல்லாத தமிழ்த் திருமணத் திட்டத்தைக் கவிஞர் வகுத்தளித்துள்ளார்.

1. பெரியார் ஒருவர் தலைமை தாங்க முன்மொழிதல்
2. வழிமொழிதல்
3. அவைத்தலைவர் தமிழ்த்திருமணம் குறித்துப் பேசுதல்
4. மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்த உரை கூறல்
4. மாலையும் கணையாழியும் மாற்றிக் கொள்ளுதல்
5. அறமொழிகளால் வாழ்த்துக் கூறல்
6. வந்தோர்க்கு நன்றி கூறல்

என அத்திருமணம் அமைகின்றது. இத்திருமணம் இன்று தமிழ்நாட்டில் பரவலாக நடைபெறுகின்றது. இதோ அந்தத் திருமண வாழ்த்துக் கேளுங்கள்!

**ஒருமனதாயினர் தோழி - இந்தத்**
**திருமணமக்கள் என்றும் வாழி**
**பெருமனதாகி இல்லறம் காக்கவும்**
**பேறெனப்படும் பதினாறையும் சேர்க்கவும்**
**ஒரு மனதாயினர் தோழி**

**இசையமுது-II**

### 2.5.3 கல்வி ஓங்குக

சமுதாயம் சீர்பெறக் கல்வி வேண்டும். கல்வியில்லாத வீடு ஒளிவிளக்குகள் இருந்தாலும் இருண்ட வீடே! கல்வியில்லாத சமுதாயம் களர் நிலம். இவ்வாறு பாரதிதாசன் கருதினார். ஆண் பெண் எல்லாரும் கற்க வேண்டுமென்று வற்புறுத்தினார். என்னுடைய அருமைத் தமிழ்நாட்டில் எல்லோரும் கல்வி கற்று இமயமலையென ஓங்கினார் என்று கூறும் நாள் எந்நாளோ? எனக்

கவிஞர் கேட்கிறார்.

**இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்**
**என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்**
**துன்பங்கள் நீங்கும் .......**

(தமிழ்ப் பேறு: 21-23. முதல் தொகுதி)

என்று தமிழ்க்கல்வி யாவருக்கும் வேண்டுமென்று வற்புறுத்துகின்றார். கல்வி ஓங்கிய தமிழ்ச் சமுதாயம் அவர் கனவு. அஃது இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது.